www.tamilarangam.net

# சமர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அட்டைப்படச் செய்தி!

இன்று ஐரோப்பிய நாடுகள் போட்டி-போட்டுக்கொண்டு கொலம்பஸ் அமெரிக்-காவைக் கண்டுபிடித்த 500வது வருட-நினைவைக் கொண்டாடுகின்றன.
ஸ்பானியரும், நோர்வேஜியர், இத்தாலியரும்; கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடிப்பதற்கு அழைத்தளம் இட்டவர் யார்?, அவர் தேசம் எது?, பரம்பரை எது எனவும், அவருக்கும் தமது தேசத்திற்கும் சம்பந்தம் எது எனவும் நிரூபிக்கப் பல முயற்சிகள் மேற்கொள்கின்றன.

ஆனால் 500 வருடங்களுக்கு முன் தொடக்கம் காலகாலமாய் அழிக்கப்பட்டு வரும் செவ்விந்திய இனமானது உலக சமாதானயுகம் என்று வர்ணிக்கப் படும் இந்நாளிலுங்கூட அமெரிக்க தேசத்தின் நிற, இன வெறியர்களால் கசக்கிப் பிழியப்பட்ட வண்ணம் இருக்கின்றனர்,

(தொடர்ச்சி 10ஆம் பக்கம்)

## 'சுமைகள்,

### ஓர் அறிமுகம்

நேசத்துக்குரியவர்களே!

உங்கள் கரங்களில் சுமத்தப் பட்டிருக்கும் 'சுமைகள்', பல நெருக்கடிகள், இன்னல் இடையூறுகளுக்கிடையேயிருந்து வெளியிடப் படுகிறது.

ஏற்கனவே எமது தேசத்திலிருந்து வெளி நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் எம்மவரால் சமூக நோக்குடைய பல தரமான சஞ்சிகைகள், பத்திரிகைகள் வெளிவந்து கொண்டேதான் இருக்கின்றன.

ஆனால் அவற்றை எம்மில் எத்தனை பேர் வாங்கக் கூடியதாகவோ, பார்வையிடக் கூடியதாகவோ உள்ளது என்று கேள்வி கேட்டால் வேதனையான விடைதான் எஞ்சி நிற்கும்.

சுமைகளின் தற்போதைய குறைந்தபட்சப் பணியாக வெளி நாடுகளிலிருந்து வெளிவரும் சஞ்சிகைகள், பத்திரிகைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட தரமான ஆக்-கங்களை மறுபதிப்பாகத் தொகுத்து உங்களிடம் சுமத்துவதோடு, எம்மிடையே பட்டை தீட்டப்படாமல்

www.tamilarangam.net



மறைந்திருக்கும் புதிய எழுத்தாளர்களையும், படைப்-
-பாற்றல் உள்ளோரையும் கண்டு, இலக்கிய உலகிற்-
-கு அறிமுகப் படுத்தும் பணியையும் செய்து கொண்டி-
-ருக்கும்.

'சுமைகள்' எந்த விதமான ஸ்தா-
பனங்களுக்கோ, தனிநபர்களுக்கோ எதிரானதல்ல.
ஆனால், மனித உரிமை மீறல்களுக்கு
எதிராக 'சுமைகள்' தனது குரல் உயர்த்தும்.

அறிமுகப்பிரதியான முதலாவது சுமையை
உங்களிடம் சுமத்தியுள்ளோம். அதே வேளை, 'சுமைகள்'
-தொடர்ந்து தரமுடையதாக வெளிவருவதற்கான பாரிய
பொறுப்பையும் வாசகர்களாகிய உங்கள்மீது சுமத்துகி-
-றோம். 'சுமைகள்' பற்றிய உங்கள் மனம்திறந்த
கருத்துக்களை எதிர் பார்ப்பதுடன், தரமுடைய ஆக்கங்-
-களையும் எதிர் பார்க்கின்றோம். நாகரீகமாக எழுதப்
படும் தரமான ஆக்கங்கள் பிரசுரிக்கப் படும்.

மேலதிக விபரங்களுக்கு:

'SUMAIHAL,
ALMENNINGS GT-1
4013 STAVANGER

— சுமைகள் —

199[illegible] - வைகாசி - 01

# உண்ட வீட்டிற்கு...

அகதிகளுக்கும், புலம்பெயர்ந்தோருக்குமான
ஐரோப்பிய ஆலோசனைச்சபை (E.C.R.E)க்கு
மட்றிட் இல் (ஸ்பானியா) சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் அறி-
க்கை; 25000 இலங்கைத் தமிழர்கள் ஐரோப்பாவிற்கு
மட்டும் அகதிகளாக 1991ம் ஆண்டு வருகை தந்துள்-
ளதாகத் தெரிவிக்கிறது.

கடந்த ஆண்டில் சுவிஸ்சர்லாந்தி-
-ற்கு 7349 பேரும், ஜேர்மனிக்கு 5000 பேரும்,
பிரித்தானியாவிற்கு 4000 பேரும் வருகை தந்துள்ளனர்.

இவர்களில் 5% வீதத்தினர் அகதி அந்தஸ்த்-
-தினை ஐரோப்பிய நாடுகளில் பெற்றுள்ளனர்.
மீதமானோர் மனிதாபிமான அடிப்படையிலான தற்-
காலிக வதிவிட அனுமதி பெற்றுள்ளனர். ஆனால்
அனைத்து ஐரோப்பிய நாடுகளிலும் வேறுபட்டு பிரான்ஸ்
தனியே 1991ம் ஆண்டில் வந்து சேர்ந்த 3398-
-தமிழர்களில் 68% வீதத்தினருக்கு அகதி அந்தஸ்த்து
வழங்கியுள்ளது.

இலங்கையின் வடக்குக், கிழக்கில்
நடைபெறும் உள்நாட்டு யுத்தத்திலிருந்து தப்பிக்க-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளியேறும் தமிழர்கள் கொழும்பிலுள்ள ஏஜண்ட்-
-களிடம் பல லட்சங்களும், வடக்கு, கிழக்கை விட்டு
வெளியேறு சில [பல] ஆயிரங்களும் செலுத்தி,
அல்லது, செலவு செய்தே இந்த ஐரோப்பிய நாடு
களுக்கு வருகின்றனர்.

இப்படி வெளியேறும் இவர்களிற் பலர்
தமது தாய் நாட்டில் அனுபவித்த துன்பங்களிலிருந்து
விலகி புலம் பெயர்ந்த நாடுகளில் புது விதமான,
அல்லது வித்தியாசமான பல 'இம்சை'களுக்கு
ஆளாகின்றார்கள். ஜேர்மனியில் மட்டும்
2000 இனவெறித்தாக்குதல்கள் 1991 இல் மட்டும்
தீவிர வலதுசாரிகளினால் நிகழ்த்தப்பட்டுள்ளது.

இவற்றில் கணிசமான அளவு பாதிக்கப்பட்டோர்
தமிழர்களாகவேயுள்ளனர்.

இவை ஒரு புறமிருக்க; சுயமுயற்சி-
-யில் முன்னேறுவோர், படித்தவர்கள், என்று மதிக்கப்பட்ட
தமிழர்களிற் பலர் புலம் பெயர்ந்த நாடுகளில் பல
சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்ட வண்ணம்-
-உள்ளனர்.

பொருளாதார நோக்குடன்; நாடுவிட்டு-
-நாடு அகதிகளைக் கடத்துதல், மிரட்டிப்பணம் பறித்தல்
போதைவஸ்துக்கள் கடத்துதல், கடவுச்சீட்டு
க்களை சட்டத்திற்கு விரோதமான முறையில்
பாவித்தல் போன்ற பல நடவடிக்கைகளில்
ஈடுபடுகின்றனர்.



அண்மையில் 'றொறன்ரோ ஸ்டார்'
பத்திரிகை வெளியிட்ட செய்தியில்; கனடா
கடவுச் சீட்டுக்களை தமிழர்கள் போதைவஸ்துக்
கடத்துவதற்குப் பாவித்ததாக ஆதாரங்களுடன்
வெளியிட்டிருந்தது.

தமிழர்கள் போதைவஸ்து, மனிதக் கடத்தல்களில்
ஈடுபட்டுள்ளனர் என்ற சர்வதேசக் கருத்தின்
பிரகாரம், இவர்கள் ஐரோப்பாவிற்கும், வட-
-அமெரிக்காவிற்கும் புலம்பெயரும் வழிகளில்
புலனாய்வுக் கண்காணிப்புகள் தீவிரப் படுத்தப்-
-பட்ட படியினால் பாங்கொக், நைரோபி-
-ஹொட்டேல் அறைகளிலும், யூகோஸ்லாவிய
எல்லைகளிலும் தமிழர்கள் நிறைந்து காணப்-
-படுவதாக பிரபல பத்திரிகைகள் கூறுகின்றன.

நோர்வே 'சொண்டாக் ஆவிசென் போஸ்தன்'
பத்திரிகையின் செய்தியின்படி இம்மாதம்
குறிப்பிட்ட தமிழ் அமைப்பு ஒன்றின் "ஒழுங்கி-
-ணைக்கப்பட்ட பொதிப் பயணம்" தடை செய்-
-யப் பட்டமையால் நூறு இலங்கைத்தமிழர்-
-கள் அல்பானியாவில் காத்திருப்பதாகக் கூறப்
படுகின்றது.

இவ்வாறான நடவடிக்கைகளில்
தமிழர்கள் தொடர்ந்து ஈடுபடுவார்களேயானல்,
சர்வதேசப் பயங்கரவாதப் பட்டியலில் தமிழர்க-
-ளின் பெயர் இடம் பெறுவது தவிர்க்க முடியாத
ஒன்றாகும்.

— தொடரும் —

www.tamilarangam.net

## நிறமற்றுப்போன கனவுகள்.

இணுவாலை விஜயேந்திரன்

மாலை,
நெடுநேரம்
நடந்து திரிந்தலுத்துக்
கட்டிலில் வீழ்கையில்
நடு நிசி.

நாசமாய்ப் போன கனவுகள்.

புத்தரின் பாதங்களில்
யாரோ
செவ்விரத்தம் பூ வைக்கிறார்கள்.

பள்ளி நாட்களில்
எனக்குச் சிநேகமான
அழகிய வஜிராவின் முகத்தில்
கண்ணீர் வடிகிறது குருதியாய்.

அவளிடமிருந்து வெள்அலரியை
யாரோ பறிக்கிறார்கள்.
ஓலமிட்டுக் கிளர்ந்தெழவும்
அவளது வாயை மூடுகின்றன,
முரட்டுத் துப்பாக்கிகள்.

இறந்துபோன மனிதர்கள்
துப்பாக்கிகளோடு திரிகிறார்கள்.

மாவலியில் மூங்கில்
குருதி நீரை முத்தமிட்டு
முகம் சுளிக்கிறது.

செத்துப் போன எல்லோரும்
'இயற்கை மரணம்'
எய்தியதாகச்
சான்றிதழில்
ஒப்பமிடுகிறார்கள்.

அழுது கொண்டிருந்த வஜிரா
திடீரெனச் சிரிக்கிறாள்.

கனவு அறுபடச்
சற்று முன்பாய்
தெளிவாய்த் தெரிகிறது

அவளது கையிலும்
துப்பாக்கி.

20.09.90

நன்றி: பனிமலர்.



ஓவியம்: மாற்கு



# மே தினம்

மேதினம் என்பதே தொழிலாளர்களின் தினம் என்ற கருத்து மறைந்து வருகின்ற இந்த காலகட்டத்தில், மேதினத்தின் உண்மையான அர்த்தத்தையும், அதன் தாற்பரியத்தையும் தெரிய வைப்பதே இன்று நம் முன்னுள்ள கடமையாகிறது.

1886 ஆம் ஆண்டு! அமெரிக்கா-விலுள்ள சிக்காகோ நகரின் வீதிகள் தொழிலாளர் இரத்தத்தால் சிவந்திருந்த காலம்! அமெரிக்கத் தொழிலாளர்கள் தங்கள் வேலை நேரத்தை எட்டு மணித்தியாலங்கள் ஆக்கும்படியும், மற்றும் பிற கோரிக்கைகளுக்காகவும் போராடி சாதனை படைத்த தினம். மேதினம் உருவாக நேரடியான காரண-மாயிருந்த போராட்டங்கள் 1884 ல். அமெரிக்காவில் எட்டுமணி நேர இயக்கத்தின் போதே துவக்கப்பட்டது. இருப்பினும், அதற்கு முந்திய தலைமுறையிலேயே அமெரிக்க தொழிலாள வர்க்கத்தின் போர்க்குணமிக்க ஸ்தாபனமாக விளங்கிய "தேசிய தொழிற் சங்கம்" குறைந்த நேரத்துக்கான வேலை என்ற கோரிக்கையை முன் வைத்து அதற்காக பரந்த அளவில் ஒரு இயக்-கத்தையே நடத்தியது. இத்தகைய இயக்க போக்கில் வளர்ந்து வந்த போராட்டங்கள் 1886 இல் உச்ச நிலையை அடைந்தன. அமெரிக்க தொழிற்சங்கங்களும், தொழிலாளர் கட்சிகளும் போராட்டத்தில் ஒற்றுமையாக அணிவகுத்து நின்றன. இத்தகைய காலங்களில்தான்

www.tamilarangam.net



தொழிலாளர்களின் உழைப்பை உறிஞ்சி வாழ்ந்த தொழிலதிபர்களும் அவர்களின் பிரதிநிதித்துவப்படுத்திய அரசும் திகில் பிடித்துப் போயிருந்தன. இதற்கு முன்பு பல்வேறு இடங்களிலும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வேலை நிறுத்தங்களும், ஆர்ப்பாட்டங்களும் நடை-பெற்றிருந்த போதும்; 1885 இல் நடைபெற்ற தொழிலாளர் கூட்டமைப்பின் மாநாட்டு தீர்மானத்-திற்கேற்ப 1886 மே முதல் தினமன்று பொது வேலை நிறுத்த அழைப்பை ஏற்று அனைத்து தொழி-லாளர்களும் போராட்டத்தில் இணைந்து கொண்டனர்.

அத்தகைய பெருமைக்குரிய, தொழிலாளர்-களின் விடியலுக்கான போராட்டத்துக்கு உத்வேகம் ஊட்டக்கூடிய மேதினம் இன்று அடைந்துள்ள நிலைமை மிகவும் கேலிக்குரியதும், கண்டனத்துக்குரியதாயும் உள்ளது. இன்று உலகெங்கிலுமுள்ள வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளாயினும் சரி, மூன்றாம் உலக நாடு-களாயினும் சரி "மேதினம்" என்பது வெறும் சம்பிரதாய பூர்வமான ஒரு சடங்காகவே மாற்றப்பட்டுக் கொண்டு இருக்கிறது. வளர்ச்சியடைந்த ஐரோப்பிய நாடுகளில் முதலாளிகளினதும், அரசினதும் அவர்களின் நலன்களிலும் அக்கறையாயுள்ள பெயரில் தொழிற்சங்கங்கள் இத் தினத்தை ஒரு கேளிக்கை தினமாகவே மாற்றிக் கொண்டுள்ளன. அவர்கள் எமக்கொரு விடிவைத்-தேடித்தரும் சக்திகள் என்று நம்புவோமானால் கிடைப்பதோ ஏமாற்றம்தான்.



இவர்களின் நடைமுறைகள்;
தத்துவம் பேசிக் கொண்டு, மனித சமுகத்தையே சுட்டுப் போட்டு விற்று, சுய தேவைகளைப் பூர்த்தி செய்-வதாகவே இருந்து வருகின்றது. ஆகவே,

உழைக்கும் மக்களின் நெறியிலிருந்து இந்தத் தொழிலாளர் தினத்தில் சரியானவைகளைத் தேர்ந்தெடுப்போம். சமத்துவ சிந்தனையுடன் சீரிய வழிகளில் சிந்திப்போம்.

எமது தலைவிதியை தீர்மானிக்கும் பொறுப்பை நாமே ஏற்போம்

"உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்"

(நன்றி! மனிதத்திலிருந்து தொ.)

---

(1ம் பக்கத் தொடர்) ஆக்கிரமிப்பாளர்கள் தமது வெற்றியின் 500வது ஆண்டைக் கொண்டாடும் இவ்வேளையில், இவர்களால் அழித்தொழிக்கப்பட்ட, அழித்தொழிக்கப்படுகின்ற செவ்விந்திய இன மக்களையும், மற்றும் உலகெங்கும் அடக்கி ஒடுக்கப்படும் அனைத்து மக்களையும் நினைவு கூருவது காலத்தின் கடமையாகும்.

— ஆயுதக ஆசிரியர் —

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சாயம் போகாத போலிகள்

சிறுகதை *வான்நிலா*

வசந்தகாலத்திற்கான வரவேற்பில் ஆரவாரம் தொனித்தது. வெறுமையோடு சோர்ந்து நின்ற மரங்கள்சிரித்துப்பேசி மகிழ்ந்தன. ஆங்காங்கே சில கடைகளில் செவ்வரத்தை, செவ்வந்தி, மல்லிகையின் மணமும் கமழ்ந்தன. பச்சைப் புல்வெளிகளைத் திறந்த மேனிகள் பல மறைத்துக்கிடந்தன. குதூகலத்தைச் சொத்தாகக்கொண்ட குழந்தைகள் நிறைந்த அந்த வீதியில் சென்றுகொண்டிருந்த அவர்களிருவரும் எங்கே தம்மை மறந்து சிரித்துவிடுவார்களே என்பதாற்போலும் "ஸ்வாத்" என்ற வாசகங்கள் காற்றோடு கலந்து, காதுகளைத் தீண்டிச் சென்றன. மௌனமாக ஒருவரையொருவர் பார்த்துவிட்டு அந்த வீதியைக் கடந்தனர்.

கண்ணம்மாவும், சுகந்தனும் பிறந்தநாள் வைபவமொன்றிற்குச் சென்றுகொண்டிருந்தனர். அவர்களிருவரும் விரும்பியோ, விரும்பாமலோ பல காரியங்களைச் செய்யவேண்டிய நிர்ப்பந்தம். ஏன் வாழ்கிறோம்?, எதற்கு வாழ்கிறோம் ? எம் வாழ்விற்கு என்ன அர்த்தம்? இவைகளைத் தெரியாமலே அவர்கள் வாழ்ந்துகொண்டிருந்தனர். "கண் போன போக்கிலே கால் போகலாமா ? கால் போன போக்கிலே மனம் போகலாமா?" இப்படி சௌந்தரராஜன் பாடுவதையும் அவர்கள் அடிக்கடி கேட்டுக் கொண்டனர்.

இன்றைய பிறந்த நாள் வைபவத்துக்கு அழைப்பு வந்ததும் "இவளுக்கு ஏழரைச் சனியன்" என அம்மம்மா முன்னர் ஒரு தடவை சொன்ன போது, தான் சிரித்தது கண்ணம்மாவுக்கு ஞாபகம் வந்தது. ஏழரைச் சனியன் ,அட்டமத்துச் சனியன் எல்லாம் பொய்யோ மெய்யோ என்று சிந்திப்பதைவிட இதைவிட வேறு ஏதாவது சனியனிருந்தால் அதுவும் தனக்குப் பிடித்துவிட்டதாகவே அவளுக்குத் தோன்றியது.

வழக்கமான அலங்காரங்கள், வரவேற்புகள் நிறைந்த சிறிய மண்டபத்தில் அம்மன் சிலைகளை நிகர்த்தாற்போல் பல பெண்கள், ஆண்கள், குழந்தைக் நிறைந்திருந்தனர். "வாங்கோ.... வாங்கோ" என்ற உதட்டின் அழைப்பை உள்வாங்கியபடியும், உதட்டால் மட்டுமே சிரித்தபடியும் இவர்களும் அவர்களோடு ஒருவராகினர்.

இவர்களைக் கண்டதும் சற்றுத் தூரத்தில் வளவளத்துக் கொண்டிருந்த சுந்தரம் மாமி பட்டுச் சேலை சரசரக்க மின்னல் வேகத்தில் வந்து குசலம் விசாரித்தபடி கண்ணம்மாவுடன் ஒட்டினாற் போல் அமர்ந்துகொண்டா.
"ம்..இலேசா வண்டி தெரியிற மாதிரிக் கிடக்கு" மெல்லக் குனிந்து சுந்தரம் மாமி குசுகுசுத்தா.
"இல்லை ... அப்பிடி ஒன்றுமில்லை" கண்ணம்மா வெடுக்கென்று பதில் கொடுத்தாள்.
"என்னப்பா இது, இங்க பிள்ளை பெறுறது எவ்வளவு சுகம் சொல்லும் பாப்பம், அவன் 'லோனும்' எல்லே கூடத் தருவான். என்டையெல்லாம் இங்கதான் பிறந்ததுகள்" - சற்றுப் பெருமையுடன் சுந்தரம் மாமி சொல்லிக் கொண்டிருந்தா.
சுந்தரம் மாமியின் கதைகளைக் கேட்கும் கேட்காதவன் போல சுகந்தன் கையில் கிடைத்த பேப்பரைத் தட்டிக்கொண்டிருந்தான்.

"நீர் ஏதும் பிரச்சினையெண்டால் சொல்லும், நான் டொக்டரிட்டைக் கூட்டிக் கொண்டு போறன்" மிகவும் உருக்கத்தோடு சொல்லிக் கொண்டிருந்த சுந்தரம் மாமியின் கதைகள் கனகமக்காவின் வரவால் சற்றுக் குழம்பியது.

"வடிவான சாறியப்பா, எங்கை வேண்டினனீர்? உண்மையாக் குமரி போலை இருக்கிறீர்." கனகமக்கா சொன்னபோது சுந்தரம் மாமி தன்னையே மறந்து முகம் சிவக்க சேலையின் வரலாற்றையே கூறத்தொடங்கிவிட்டா. சேலையின் வரலாறு கேட்கும் தன் சோகத்தைவிட குழந்தைப் பேற்று ஆலோசனையிலிருந்து கனகமக்கா விடுதலையளித்துவிட்டதை நினைத்துக் கண்ணம்மா நிம்மதிப் பெருமூச்சொன்று விட்டாள்.
சுந்தரம் மாமி தன் சேலையையும், இளமையையும் சுட்டிக்காட்டிய கனகமக்காவுக்கும் ஏதாவது சொல்ல வேண்டும் என்று நினைத்துப் போலும் "இங்கேப்பா உம்மட நெக்லஸ் எங்க செய்விச்சனீர்?" எனக் குழைந்துகொண்டா. சந்தர்ப்பம் பார்த்திருந்ததுபோல கனகமக்கா தொடங்கினா, ஒரு தொடங்குதான்!
ஐயோ, தாறதைத் தந்து, வேண்டிறதை வேண்டி எங்களை விட்டாக்காணும் என்ற கெஞ்சலான பார்வையுடன் கண்ணம்மா சுகந்தனைத் தேடிப்பிடித்து கண்களால் பேசிக்கொண்டாள்.

கனகமக்கா திடீரென விழித்துக்கொண்டாற் போல் கண்ணம்மாவின் பக்கம் திரும்பி "நீர்தான் சுகந்தனடை..." என அரைகுறை அறிமுகத்தினை நிச்சயப்படுத்திக்கொண்டு, சற்றுத் தள்ளியிருந்த மற்றப் பெண்களுக்கும் இவளை அறிமுகம் செய்துவைத்தா. இப்போது அவர்களும் நெருக்கமாக வந்து அமர்ந்துகொண்டனர்.

வழக்கமான புருசர்கள் - குழந்தைகள் - நகைகள்- சேலைகள் பற்றியேகதை சுற்றிச் சுற்றிச் சுழன்றுகொண்டிருந்தது.

"நீர் ஏன் நகை போடேல்லை? உம்மடை குடும்பம் அவ்வளவு வசதியில்லையெண்டு அறிஞ்சனுனான். ஆனா இங்கை நீர் கொஞ்சமெண்டாலும் அவரிட்டைச் சொல்லி ஒண்டு, ரெண்டைச் செய்வியும்."என்று கனகமக்கா முன்மொழிய, "ஓமோம், உப்பிடி நகையில்லாம வாறது சுகந்தன்ட சொந்தங்களுக்கும் மதிப்பில்லையெல்லே" சுந்தரம் மாமி வழிமொழிய மற்றவர்கள் தலையாட்டியபடி கண்ணம்மாவின் பதிலுக்குக் காத்திருந்தனர். அவள் எதுவும் பேசவில்லை.
"நீங்க இயக்கத்திலை இருந்தனீங்களோ?" ஒரு இளம் பெண் இப்படிக் கேட்டது கண்ணம்மாவுக்குக் குழந்தைத் தனமாகப் பட்டது. "இல்லை"–நிதானமாகச் சொன்னாள். இந்தப் பதிலை விட அவளிடமிருந்து அவர்கள் நிறையவே எதிர்பார்க்கிறார்கள் என்பதைக் கண்ணம்மா உணர்ந்தாள். இப்போது கூடியிருந்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



துலாவித் துலாவிக் கதை கேட்டுவிட்டு பின்னர் ஒருவர் கதைத்ததை இன்னொருவரிடம் சொல்லும் போது " அவ நல்லா விடுவா - புழுகுவா - (f)பஸ் அடிப்பா - விலாசமடிப்பா" என்று சொல்வதற்குத்தான் இவர்கள் துடியாய்த் துடிக்கிறார்கள் என்பது அவளுக்கு நன்கு விளங்கியது.

"நகை போடுறதையும், செய்விக்கிறதையும் விடப் பிரச்சனை, ஏன் போடுறமெண்டதுதான். நகை போடுறது வடிவுக்கெண்டதைவிட, அது எங்கடை 'ஸ்டேட்டசைக்' கொஞ்சம் கூட்டிக் காட்டும் எண்டுதான் கன பேர் போடீனம்" கண்ணம்மா கனகமக்காவை ஆழமாகப் பார்த்தபடி சொன்னாள்.

" உங்களுக்குத் தெரியாதக்கா, ஊரிலை எத்தின பேர் இரவல் நகை போட்டுக் கொண்டு துடக்கு வீடு, கலியாண வீடு ஏன் செத்த வீட்டுக்கும்கூடப் போகினம், ஆமி கள்ளர் உப்பிடி ஆயிரம் பிரச்சினைக்கை இரவல் நகை வேண்டி, போட்டுத்தான் போகிற நிலைமையெண்டா...." கண்ணம்மா ஒரு இழுவை இழுத்தபடி கண்களைச் சுற்றி ஒரு நோட்டம் விட்டாள்.

"நீர் சொல்லுறதும் நியாயம் தான். என்னட்டையே எத்தினையோ பேர் இரவலுக்குச் சங்கிலி வேண்டியிருக்கினம்" ஒரு பெண் கூறியபோது அவள் அதை எந்த நோக்கத்தோடு சொன்னாள் என்பது கண்ணம்மாவுக்குப் புரியவில்லை. இதிலயும் விலாசம்...? நெத்தியடி ? ஏதாவது இருக்குமோவென அவளுக்குச் சந்தேகம் படர்ந்தது.

"எத்தின்னயோ பேர் நகை போடாட்டி மதிப்பில்லையெண்டு நினைக்கினம், இரவல் வாங்கியெண்டாலும் போட்டுக்கொண்டுதான் போகினம். இது ஆராலை வந்ததெண்டது நினைக்கிறியள் ?" கண்ணம்மா கண்ணம்மா சுந்தரம் மாமியை நோக்கிக் கேட்டாள்.

"இதேன் எங்களுக்கு, எங்களிட்டை இருக்குது போடுறம், இல்லாதவையளுக்கு ஏனுந்த ஆசை? ஒருவேளை துலைஞ்சா என்னெண்டு திருப்பிக் குடுப்பம் எண்டு அதுகள் நினைச்சா வேண்டுங்களே? "சுந்தரம் மாமி சொன்னபோது கண்ணம்மாவுக்குத் தன்னை யாரோ கிணற்றுக்குள் தள்ளிவிட்டாற் போல் உணர்ந்தாள்.

உப்பிடிக் கதையாதையள். காசு இருக்கிற நாங்கள் நகை போட்டாத் தான் ஒரு மதிப்பெண்டு நினைக்கிறபடியாத்தான் கஸ்டத்திலை வாழுற எங்கடை உறவுகள் தங்களையும் ஒரு மனுசராக் காட்ட, தங்களையும் நீங்க அப்பதான் உறவெண்டு நடத்துவியள், மதிப்பியளெண்டு இரவலாவது வேண்டிப் போடுதுகள். "கண்ணம்மா ஆத்திரமும் வேதனையும் கலந்த தொனியில் சொல்லிக்கொண்டிருந்தாள்.

இடையிடையே அதிர்ஸ்டமும் அவளை எட்டிப் பார்க்கத்தான் செய்தது. ஆம் ! 'கேக்' வெட்டுவதற்கான ஆரவாரங்கள் இவர்களது கதையைத் திசைதிருப்பியது. பாடல்கள் ...கைதட்டல்கள் ...படப்பிடிப்புகள்...அன்பளிப்புகள்."

எப்பவும் இப்படித்தான் செய்யிறது வழக்கம், முதல் கேக்கை வெட்டி, பிறகு..." ஒருவரின் குரல் அந்தக் கலகலப்பு நிறைந்த கூட்டத்திலும் ஓங்கி ஒலித்தது. வேதாகம விதிகளெல்லாம் பின்பற்றும் வைதீகர் போல அவர்



பேசிக்கொண்டிருந்தார். அவரது ஆகமம் 'கேக்'வெட்டுவதெப்படி? பரிமாறுவதெப்படி? என்ற நியதிகளை எல்லாம் திட்டவட்டமாகச் சொல்லியிருந்தது போல கண்ணம்மாவுக்குப் பட்டது. இவர்களது சமயம், சடங்கு, சாஸ்த்திரமெல்லாமே சந்தர்ப்பத்திற்கேற்றாற் போல கதையளக்கத் தான், கண்ணம்மாவின் முனகல் வெளியில் கேட்பதற்குக் காலம் இன்னும் கனியவில்லை.

'கேக்' பரிமாறப்பட்டதின் பின்பு ஆண்கள் ஒருபுறமாகப் போனார்கள். கணவர் குடிப்பது விருப்பமில்லையென்று சொல்லிக் கொள்ளும் பெண்கள்கூட ஓடியோடி அவர்களுக்கு கதிரை எடுத்துப் போடுவதிலும், அவர்களுக்குத் தேவையானதைக் குறிப்புணர்ந்து செய்வதிலும் தம்மை அர்ப்பணித்திருந்தார்கள். "ஆண்" என்ற பிறப்புத் தான் அவர்களுக்கு எத்தனை உபச்சாரங்களைக் கொடுக்கிறது. ஆண்கள் இருந்து குடிப்பதற்கான ஒழுங்குகளை முடித்துவிட்ட அவர்கள் கண்ணம்மா இருந்த பக்கமாக வந்து குழுமத் தொடங்கினார்கள். அவர்களது வாய்க்கு அவர்கள் ஓய்வு கொடுக்கவேயில்லை.

கண்ணம்மாவுக்கு வேதனை நெஞ்சை அடைத்தது. எங்காவது தனிமையில் ஓடிப் போய் விம்மி விம்மி அழ வேண்டும் போலிருந்தது. எத்தனையோ 'செல்' அடியிலும், 'பொம்பர'டியிலும் ஒரு காயம்கூடப்படாமல் உயிர் தப்பியது இவ்வாறான ஒரு நரக வாழ்க்கையை அனுபவிக்கத்தான் போலும் என வெம்பிக் கொண்டாள். வாழ்க்கையைத்தான் ஒவ்வொருவரும் எப்படியெப்படி அர்த்தப்படுத்திவிட்டார்கள். இவர்கள் படிப்பதுகூட ஒரு விலாசத்துக்கும் வேலைக்கும் மட்டும்தானே? ஒவ்வொரு அடியை எடுத்து வைக்கும்போதும் மற்றார்களுக்கு 'நெத்தியடி' போடுவதில் அக்கறை கொள்கிறார்களென்றால் இவர்களுக்கு எது வாழ்வு? மற்றவனைவிடத் தனக்கு ஒன்று கூடத் தெரியும் எனச் சொல்வதிலும், காட்டிக் கொள்வதிலும் எவ்வளவு திருப்தியடைகிறார்கள். மற்றவனின் குடும்ப உறவுகள், பிரச்சனைகள் பற்றிப் பேசுவதில் எவ்வளவு சாந்தயடைகிறார்கள். தங்கள் தங்கள் வாசற்படிகளை இவர்கள் எப்பவும் மறந்துவிடுகிறார்கள்.

"எங்கடையவர் உப்பிடி ஏதும் 'பார்டடி' எண்டா மட்டும்தான் குடிக்கிறவர். மற்றும்படி ஒண்டுமில்லை" சுந்தரம் மாமி எடுப்போடு சொன்னது கண்ணம்மாவின் சிந்தனைகளை மேலும் தட்டிவிட்டது. - என்னடா இது! 'பார்ட்டி'யிலை மட்டும் எடுக்கிறதெண்டா நாகரீகமெண்டு நினைச்சாவோ இல்லாட்டி ஒசியிலை வாறதுதானே எண்ட நினைப்போ... இருக்குமிருக்கும் தாங்களும் இடைக்கிடை விலாசத்துக்கு 'பார்ட்டி' வைச்சுப்போட்டு போறவாறயிடத்திலை வயிறு குளிர ஊத்திறவையள் போலவெனக் கண்ணம்மா நினைத்துக்கொண்டாள்.

"இவர் அப்பிடியில்லை நெடுக எடுப்பர்... எனக்குவிசர்தான் வாறது.... பிள்ளையளும் வளர்ந்து வருதுகள்" இன்னொரு பெண் சற்று உணர்ச்சிவசப்படடு வேதனையைக் கொட்டிக் கொண்டிருந்தாள்.

"இப்ப கத்திப் பிரயோசனமில்லை.... பிள்ளை குட்டி வரமுதல் இதுகளைக் கதைச்சிருக்கவேணும், எல்லாம் அலுத்தாப் பிறகு கத்தியென்ன செய்யப் போறியள்?"

www.tamilarangam.net



கிண்டல் கலந்த பாணியில் கனகமக்கா சொன்னா. அந்த வார்த்தைகளின் அர்த்தத்தை கண்ணம்மா அழுத்தமாக உணர்ந்தாள். அழகைக் காட்டி ....சொல்லப் போனால் தன்னை விற்றுக் கணவனிடம் விசயங்களைச் சாதிக்கும் அவளது வக்கிரமான எண்ணம் ஒருவகையில் பரிதாபகரமான அர்த்தமற்ற உறவு இவளது இதயத்தைக் கசக்கிப் பிழிந்தது. கதைப்பதோடும், சிரிப்பதோடும் ஒருவரை ஒருவர் மட்டந் தட்டுவதோடும் நின்றுவிடும் இவர்கள் ஒரு நிமிடம்... ஒரேயொரு நிமிடம் சிந்தித்தாலென்ன?

"இவர் எடுத்தாலும் அதிகம் கதையார்.." மீண்டும் சுந்தரம் மாமி அறுக்கத் தொடங்கினா. "இப்ப தெரியாது, பிள்ளையள் வளர வயது போக.. ஏன், திரும்பி ஊருக்குகி கலைச்சு விட்டாளெண்டால் தெரியும்" அந்தப் பெண் ஆத்திரம் கலந்த பாவனையில் சொல்லியபடி கண்ணம்மாவைப் பார்த்தாள்.

"காசிருந்தா 'பார்ட்டி' எண்டும் பம்பலுக்கு எண்டும்...முஸ்பாத்திக்கு ...ஒரு 'சேஞ்'சுக்கு எண்டு குடிக்கலாம். கஸ்டமெண்டா அலுப்புக்கு கவலையைப் போக்கிற மருந்தெண்டு குடிக்கலாம். ஒரு நேரக் கஞ்சியை எண்டாலும் பிள்ளையளுக்குக் குடுத்திடுவமெண்டு பொம்பிளையள் பாத்துக்கொண்டிருக்க தவறணையால வந்து கஞ்சிக் காசுக்குப் பதிலாக் காலாலை குடுக்கிற கதையள் கற்பனையில்லை." கண்ணம்மா சொல்லி முடிப்பதற்குள் தனக்கு மிஞ்சி எவரும் கதைப்பதை விரும்பாத சுந்தரம் மாமி எரியிற நெருப்பில் எண்ணை விட்டாற் போல அந்தப் பெண்ணைப் பார்த்து "எங்களுக்குப் பிரச்சினையில்லை,... நாங்க இங்க எப்பவும் எவ்வளவு காலமும் இருக்கலாம்.. இவர் உந்த அலுவலெல்லாம் முடிச்சுப் போட்டார்." நெஞ்சை நிமிர்த்தியபடி சொன்னா. நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும் அவவிடம் துள்ளி விளையாடின. "இந்தத் தேசத்தில் நீதிமன்றக் கட்டிடங்கள் குனிந்து நிற்கின்றன, நிதி சேர்க்கும் கட்டிடங்களோ நிமிர்ந்து நிற்கின்றன "எப்பவோ எங்கோ வாசித்த வரிகள் கண்ணம்மாவுக்கு ஞாபகம் வந்தன.

"உங்களை அந்த மாமா வரட்டாம்" மழலைக் குரல் ஒன்று சொல்லக்கேட்டு அச்சிறுமியைத் தழுவியபடி எழுந்த கண்ணம்மா "நாங்க.. நாங்க, எங்கட வீடு, எங்கட குடும்பம், எங்கட பிரச்சனை எண்டு மட்டும் பார்க்கிற வரையில இதுகள் உப்படித்தான் இருக்கும்." உறுதியோடு சற்று உரக்கச் சொல்லியபடி திரும்பினா.

"உவவுக்கு வேலைவெட்டி, பிள்ளைகுட்டி இல்லாததில கதைக்கிற கதையைக் கேட்டியளே" வார்த்தைகள் மெதுவாகவும் ஆனால் மிகவும் தெளிவாகவும் கண்ணம்மாவிற்குக் கேட்டது. அவள் மீண்டும் ஒருதடவை அவர்களைத் திரும்பிப் பார்த்துச் சிரித்துவிட்டு சுகந்தனை நோக்கி நடந்தாள்.

இடைநடுவில் புறப்பட்ட அவனது முடிவு அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது. அவர்களிருவரும் வீதியில் இறங்கி நடக்கத் தொடங்கினர்.

மெல்லியதாக மழை தூறிக்கொண்டிருந்தது. குளிர்காற்று முகத்தை சில்லென்று அறைந்து சென்றது. வானம் இருண்டு கிடந்தது. காற்று இடையிடையே பெருமூச்சு விடுவது



போல வீசிக்கொண்டிருந்தது. மரங்கள் அசைவது, கையசைத்துத் தம்மை வழியனுப்புவது போல் கண்ணம்மாவிற்கு இதமளித்தது. இயற்கை வெற்றிடங்களை விடுவதில்லை, எம்மையும் அது அனைத்துக் கொள்ளும் என நினைத்தவளாக குளிரில் விறைத்துக் கொண்டிருந்த தனது கரங்களால் சுகந்தனின் கரங்களை இறுகப்பற்றினாள். அவன் அவளது கரங்களை மேலும் அழுத்தியபடி "எல்லாம் எப்படி இருந்தது?" எனக்கேட்டான். தளர்ந்து போன ஒரு கிழுவனின் குரல்போல அது கண்ணம்மாவிற்குக் கேட்டது. அவள் சிரித்தாள். "ஏன் சிரிக்கிறியள்? இந்த அனுபவங்கள் எல்லாத்தையும் ஒரு நாடகமாப் போட்டா நல்லாவிருக்கும்" அவனது குரலில் இப்போழுது இளமை இழையோடுவதை அவள் உணர்ந்த போதும் "ஓம்! போடுங்கோ, கனக்கப்பேர் கிடக்கிற காஞ்சிபுரங்களைக் கட்ட இடம் வருதில்லையென்று அழுகினம்" அவள் விரக்தியோடு சொன்னாள்.

"அம்மா, அவை எதுக்கு வருகினமென்டது எங்கட பிரச்சனையில்லை; நாடகத்திலையோ அல்லது ஒரு சஞ்சிகையிலோ சொல்லுற நாலு கருத்தில ஒருவன்.. ஒரு மனிதன் உருவானாக்கூட அது எவ்வளவோ பெரிய விசயம்; நல்லகாலம் உங்களைப் போல அந்த நேரம் மார்க்சும், கோர்க்கியும், பாரதியும் யோசிக்காம விட்டது." அவள் சுகந்தனின் விழிகளை வெறித்துப் பார்த்தாள். அவன் விடவில்லை, தொடர்ந்து கதைத்தபடி நடந்தான்.

அவர்கள் ஒரு மலையினிடையில் கட்டப்பட்ட படிகளில் ஏறிக்கொண்டிருந்தனர். சுகந்தன்

தன்னையும் பாரதி என எண்ணிப்போலும் தன் சின்ன மீசையை முறுக்கிவிட்டு படிகளில் காலை உதைத்துத் தாளமிட்டபடி, தாளலயத்தோடு சொன்னான்

"அக்கினிக் குஞ்சொன்று கண்டேன்- அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்;
வெந்து தணிந்தது காடு - தழல்
வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ?
தத்தரிகிட... தத்தரிகிட... தித்தோம்."

அவன் சொல்லிய வரிகளை மெதுவாக, ஆனால் ஏதோவொரு நம்பிக்கையுடனும் உறுதியுடனும் சொல்லியபடி கண்ணம்மாவும் படிகளில் ஏறினாள். பாரதியின் அந்த வரிகள் அந்த மலை முகடுகளில் பட்டுச் சிதறி நம்பிக்கை நட்சத்திரங்களாக உதிர்ந்துகொண்டிருந்தன.

நன்றி; சுவடுகள்

# அப்பாவிடம் ஓர் அதிரடிப் பேட்டி

*என் அப்பாவிடம் சில கேள்விகளைக் கேட்டேன்.*

— ஆனந்பாபு

**நான்:** அப்பா, நீங்க எதுவரைக்கும் படிச்சிருக்கீங்க?

**அப்பா நாகேஷ்:** ஒரு புஸ்தகம் கொடுத்தால் அது முடியறவரைக்கும் படிப்பேன். அப்புறம் மூடிவச்சுடுவேன்.

**நான்:** இப்படி விளையாடாதீங்க. நான் கேட்டது ஸ்கூல் படிப்பு. சரி அதவிடுங்க. பரீட்சையில் பிட் அடிச்சிருக்கீங்களா..?

**அப்பா:** ஏன்டா அப்பாகிட்டே கேட்கிறமாதிரியா கேட்கறே. பிட் எதுக்காக அடிக்கணும் நான்? அதற்கு ஒருபடி மேலே. புஸ்தகத்தையே அடிப்பேன். ஏன்னா பாடப் புஸ்தகத்தைப் படிக்க மாட்டேன். பரீட்சையின்போது மட்டும் கேள்விக்குப் பதில் தேடிக் கரெக்டாக் கண்டுபிடிச்சு எழுதிடுவேன். ஒருதடவை வாத்தி

www.tamilarangam.net



யார் பாத்துட்டார். 'ஏண்டா நாகேஸ்வரா, பரீட்சை ரூமிற்கு எதுக்குடா புக் உனக்கு?'ன்னார். நான் உடனே ''பேப்பருக்குக் கீழே வச்சு எழுத சௌகர்யமா இருக்கு சார்!'' என்றேன். அத்றகு வாத்யார் 'வெளியே போடா நாயே'ன்னு துரத்திவிட்டுட்டார்.

நான்: பாவம்பா நீங்க. அந்தக் காலத்தில் ஸ்கூலுக்கு டிமிக்கி கொடுத்துக் கட் அடிச்ச பழக்கமுண்டா?

அப்பா: டேய், ஓங்கி அறைஞ்சிடுவேன். ஆமாம். என்னை என்னன்னு நினைச்சிட்டே. மட்டு மரியாதையே கிடையாதா? சரி ஏதோ ஆசைப்பட்டுக் கேட்கிறே என்றைக்குமில்லாமல். அதனால் சொல்றேன். ஒரு தடவை வாத்தியாரிடம் 'வர இருக்கும் புதன்கிழமை எனக்கு ஜுரம் வர இருப்பதால் தயவு செய்து அன்று நான் வராமல் போவதை லீவாக பாவிக்கவும்'னு ஒரு லீவு லெட்டர் எழுதினேன். வாத்தியார் கூப்பிட்டார். 'ஏண்டா நாகேஸ்வரா, நீ என்ன தீர்க்கதரிசியா இல்லை ஞானியா, வரப்போகிற புதன்கிழமைக்கு இன்னிக்கே லீவு லெட்டர் 'அதுவும் ஜுரம் வேற வரும்னு. அதை எப்படிடா சொல்றே'ன்னு கேட்டார். அதற்கு நான், 'சார் கோகுலாஷ்டமி இன்ன தேதியில் வருதுன்னு நாம எப்படித் தெரிஞ்சிக்கிறோம். அது மாதிரிதான்'னு சொன்னேன். அப்போது பளார்னு வைத்தாரே ஒரு அறை: அன்னிக்கே லீவு கொடுக்கிற மாதிரி ஆகிவிட்டது.

நான்: அது சரிப்பா. ஒரு கேள்வி. தப்பா எடுத்துக்காதீங்க. நீங்களோ ப்ராமின். அம்மாவோ கிறிஸ்டியன்...

அப்பா: டேய் டேய்! நிறுத்துடா. என்ன, லவ் மேரேஜான்னு கேட்கப் போறியா? பிறந்து வளர்ந்து இத்தனை வருஷம் கழிச்சு. டேய் உன் தம்பியோட பொண்டாட்டி முஸ்லிம். அது தெரியுமில்லே. ஒன்று நல்லா கேட்டுக்கோ. நான் தாராபுரத்துக்காரன். பாரதியார் எட்டயபுரத்துக்காரர். அவர் தன் எழுத்தை ஏட்டில்தான் எழுதி வைத்தார். த்தாராபுரத்தான் வீட்டிலேயே செய்து காண்பித்துவிட்டேன். பார்த்தியா? ஜாதி, மதம் எப்படின்னா உன் வெளி உடம்பு எனக்குப் பிடிக்கவில்லை. என் வெளி உடம்பு உனக்குப் பிடிக்கவில்லை. அதுனாலே உனக்கு என்னைப் பிடிக்கவில்லை. இது ஒன்று.

இரண்டாவது. உனக்கு ஒன்று பிடித்தது, அது எனக்குப் பிடிக்கவில்லை. அதனால் உனக்கு என்னைப் பிடிக்கவில்லை.

மூன்றாவது உனக்கு ஒன்று பிடித்தது. அதுவே எனக்குப் பிடித்ததால் உன்னைப் பிடிக்கவில்லை. இது தாண்டா ஜாதி, மதம். இதைத் தூக்கிப் போட்டால் முடிந்துவிடும்.



நன்றி: குமுதம்



# புலப் பெயர்வும் எமது மொழியும்...

எம் அருமைத் தேசத்தை விட்டு வெளிநாடுகளில் புலம் பெயர்ந்துள்ள தமிழர்களாகிய நாம், எமது இருப்பைத்தாங்கியிருக்கும் நாடுகளில் (குறிப்பாக, ஐரோப்பா கனடா) எமது மொழி எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை ஆராய்வோமானால் வெட்கித்தலைகுனிந்து, தயங்கும் நிலைதான் எம்மைச் சூழ்ந்து கொள்ளும்.

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த குடி" என்று பலர் கூறிக் கொள்கின்றனர். இதன் உண்மையான அர்த்தமாவது 'தமிழ் மொழி, எவ்வளவு பழமை வாய்ந்தது என்பதை உணர்த்தவே.

அதாவது; இந்தியாவின் தென்பகுதியிலிருந்த தமிழ் மொழியானது பல நூற்றாண்டுகளுக்கு முன் ஆபிரிக்கா அவுஸ்திரேலியாக் கண்டங்களுக்கும் பரவியிருந்திருக்கிறது.

மொறிசியஸ் என்னும் தீவில் இன்றும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


தமிழர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஆனால் அவர்கள் தற்பொழுது தமிழ் மொழியைப் பேசுவதில்லை. அதாவது மன்னர் காலத்திலே வணிகத்திற்காகச் சென்று குடியேறியவர்கள் அங்கு தமிழ் மொழியையும் பரப்பினர். பின்னர் அங்கு இருந்த மக்களின் உதாசீனத்தாலும், சில வல்லரசுகளின் தணிக்கைத் தனத்தாலும் தமிழ் மொழி அழிக்கப்பட்டது. ஆனாலும் அங்கு இப்பொழுதும் தமிழ்ப் பெயர்களைக் கொண்ட பல தமிழர்கள் வாழ்கின்றனர். இருப்பினும் அவர்களுக்குத் தமிழ் மொழி பற்றிய அறிவோ, தமிழ் மொழியைப் பேசும் திறனோ இல்லை.

இதே போல் அவுஸ்திரேலியாவிற்குப் பக்கத்தேயுள்ள (F)பியுஜி, என்ற தீவிலும் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களும் தமிழ் மொழியைப் பேசாத (F)பியுஜிக்குடியினராக வாழ்கின்றனர்.

தற்பொழுது தென்னிந்தியாவிலும், இலங்கைத் தீவிலுமே தமிழ் பேசுவோர் அதிகம் காணப் படுகின்றனர். அதே வேளை இலங்கையில் நீர்கொழும்பு, புத்தளம் பகுதியில் வாழும் தமிழ் மக்கள் இன்று சிங்களவாதிகளின் கட்டாயத்தாலும், தவிர்க்க முடியாத காரணங்களாலும், சந்தர்ப்பங்களாலும் தாமும் சிங்களவர்களாகவே மாறி வருகின்றனர். சிங்கள இனவாதிகளின் துன்புறுத்தல்களிலிருந்து தம்மைத் தற்காத்துக் கொள்வதற்காக வெளியிடங்களில் தமிழைத் தவிர்த்து சிங்களம் பேசியவர்கள் இப்போது முற்று முழுதாகவே சிங்களவராக மாறும் சூழ்நிலை உருவாகி விட்டது. இவ்வாறு வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் எம்மவர் எவ்வளவு தூரம் தமிழ் மொழியைப் பேசுகின்றனர்? தமிழறிவை வளர்த்துக் கொள்ளும் முயற்சியில் எந்தெந்த விதமானோர் முயற்சிக்கின்றனர்? குறிப்பாகச் சொன்னால் வெளிநாடுகளில் உருவாகும் எமது அடுத்த தலைமுறையினர் எந்த மொழியைத் தாய் மொழியாகக் கொண்டு பேசப் போகிறார்கள்? இங்கு வாழும் எமது குழந்தைகளுக்கு அவர்களுடைய பெற்றோர்கள் தமிழ் மொழியைக் கற்றுக் கொடுக்க முயற்சிக்கிறார்களா?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வெளிநாடுகளில் வாழும் எம்மவர்களே;
தமிழ்மொழியைப் பேசுவதில் ஒருவித
கூச்சத்தனம், அல்லது மரியாதைக் குறைச்
சல் ஏற்படுமென்ற அச்சம் தொடர்பாக
தமிழ்மொழியைப் பேசுவதை குறைத்து-
-வருகின்றனர் என்பது வெளிப்படையான
பரிதாப உண்மைகள்.

இவை தவிர தமது குழந்தை-
களுடன் யாராவது தமிழில் பேசினால்
"பிள்ளையோட தமிழ்ல கதைக்காதேங்கோ"
என்று தடை போடும் சம்பவங்களும் உண்டு.

இந்த நிலை நீடிக்குமானால், எமது
எதிர்கால சந்ததியினர் எந்த மொழியைத்
தேசிய மொழியாகக் கொள்ளப் போகிறார்கள்?

எமக்குத் தஞ்சமளித்து ஏற்றுள்ள
இந்த நாடுகள் எம்மைத் திரும்ப எமது
தேசத்திற்கு அனுப்பிய பின் நோர்வேஜிய
மொழியை மட்டுமே தெரிந்து வைத்துள்ள
ஒரு குழந்தையும், ஜேர்மன் மொழியை
மட்டுமே பேசக்கூடிய ஒரு குழந்தையும்
தங்களுக்குள் எந்த மொழியில் பேசுவார்கள்?



தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளில்
இவர்கள் எந்த மொழியில் கல்வி கற்கப்
போகிறார்கள்? நாட்டிலிருந்து
இனியும் எமது குழந்தைகள் தமது பேரன்,
பேத்தி, ஏனைய உறவுகளோடு எந்த
மொழியில் உரையாடி உறவாடப் போகி-
றார்கள்?

பெற்றோர்களே! இந்தக்
கேள்விகளை நீங்கள் உங்களுக்குள் எப்-
-போதாவது கேட்டதுண்டா?

ஒரு அரபு நாட்டுக்காரன் இங்கு
எவ்வளவு காலம் வாழ்ந்தாலும், அவனது
குழந்தைகள் இங்கேயே பிறந்து வளர்ந்தி-
-ருந்தாலும், இரண்டு அராபியக் குழந்தை-
கள் சந்தித்துக் கொள்ளும் போது, தமது
தாய்மொழியான அரபு மொழியிலேயேதான்
உரையாடுவார்கள். இந்த உணர்வு
எம்மவர்க்கு ஏன் இல்லாமல் போனது?
பெற்றோரே சிந்தியுங்கள்! எமது அடுத்த
தலைமுறையினருக்காக சற்று சிந்தியுங்கள்.

— சுமதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


## தென்றலாயிருப்பினும்

அசைவன அசையட்டும்
ஆடுவன ஆடட்டும்
ஊர்வன ஊரட்டும்
இப்போதைக்கு என்னை
விட்டுவிடு.


காற்றில் அசையும் பூக்களையும்,
அலையில் ஆடும்
வெண்நுரைக் குமிழ்களையும்,
சிறைப்படாமல் ஊருகின்ற
சின்னத் தென்றலையும்
இப்போ என்னால்
ரசிக்க முடியாது.

பூங்காற்றும்
சுடும்வேளை இது
பூக்களை எப்படி
என்னால் ரசிக்க முடியும்?

பட்டினி அலையில்
அலைக்கழியும் வயிற்றோடு
அலையின் எச்சங்களை
நான்
எங்கனம் ரசிப்பேன்?

எனது பசியை
முதலில்
தீர்க்க முடியுமா உன்னால்?
இல்லை:

எனது தாகத்தையாவது
போக்க முடியுமா பார்!
பசி, தாகம்
இவைகள்
இவைகளாகவேயிருக்க
இயற்கையை ரசிக்க
எப்படி முடியுமென்னால்?



எனது பசி, தாகம் தீரட்டும்
அதன் பின்பு வா.
இயற்கையின் வதனங்களை
நிறையவே ரசிப்போம்.
சாவகாசமாய் உட்கார்ந்தே
பேசுவோம், எழுதுவோம்.

வேண்டுமானால்
இப்போ எனது
தீயிலும் வேகாத
தீய துயரங்கள் தீரும் வழியை
பேசுவோம்......

பட்டினி உலையில் கொதிக்கும்
என் குழந்தைகளின்
பசி வயிற்றை
சிறிது சிந்திப்போமே....

போ.... போ....
நீ
ஜீரணமாவதற்காக
தென்றலைப் பருகுவேன்.
தென்றலாயிருப்பினும்
காற்றைக் குடித்து - என்
தாகம் தணியாது, பசியும் தீராது
போ போ....

-தமயந்தி-



## ஒரு சுவைக்கீரை

வாழ்க்கையாகிய புடவை மிகவும் நைந்துவிட்டது. பூப்போல் பாவிக்க வேண்டியிருக்கிறது. ஆனால் செல்லம்மாளுக்கோ, அடித்துத் துவைத்துக் கசக்க வேண்டும் என்ற மாதிரி அழுக்குத் திட்டுகள் தெரிகின்றன. அவ்வப்போது கசக்க முற்படுகிறாள். ஆனால் அது தெய்வீக இழைகளால் பின்னப் பட்டாற் போன்றதோர் உணர்வு ஊடே புகுந்து அவளை பின்னிழுக்கிறது. நழுவ விட்டு விடுவோமோ என்ற அச்சமாக அது கனக்கிறது...

காட்டு விறகு. புகைந்து புகைந்து கண்ணைக் கரிக்கிறது.

ஒரு துண்டு பூசணிக்காய் இருக்கிறது. அதைக் குழம்பு வைத்துச் சோற்றை வடிக்கலாம்.

காலையில் எழுந்து எங்கே போயிருக்கிறாரோ? தோப்போ, கடற்கரையோ, எந்த மடமோ?

கண்ணீர் வடிய அடுப்பை ஊதுகிறாள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

''செல்லம்மா! செல்லம்மா!''

லட்சம் வராகனுடன் வந்துவிட்ட உற்சாகம் அந்தக் கூவலில் பொங்குகிறது.

செல்லம்மா அடுப்படியிலிருந்து வருகிருள்.

ஒரு ஆள், ஒரு சுமை கீரைத்தண்டைக் கொண்டு வந்து வைத்துவிட்டுப் போகிருன்.

''செல்லம்மா! கீரைத்தண்டு மிக நன்ருக இருக்கு பார்! பாவம், அவனுக்கு யாருமே வாங்க வில்லேன்னு குறையாக இருந்தது. மூணு ரூபாய் குடுத்து நானே வாங்கிட்டேன்.''

பெருமையுடன் தாடியை மீசையைத் தடவிக் கொண்டு நிற்கிருர்.

இவள் அழுவாளா, சிரிப்பாளா?—

''இத்தனே கீரை நமக்கெதுக்கு? ஒரு தண்டு இருந்தா யதேஷ்டம். போய் அத்தனேயும் விலே கொடுத்து வாங்கியிருக்கிறீரே?''

''நீதான் கீரைத்தண்டை நன்ருச் சமைப்பியே? சமை. நமக்கு அதிகமானுல் எல்லா சிநேகிதர்களுக்கும் குடு!''

''இப்படிக் காசைக் கரியாக்குவீர்களா? நான் அரையணுக்குத் தேங்காய் வாங்கக்கூடக் கணக்குப் பாத்துண்டு இருக்கேன். நாளக்கு போது விடிஞ்சா மணியரிசி இல்லேங்கற நிலேமையிலே இருக்கறப்ப, மூணுரூபாக்கி வண்டி கீரையை வாங்கிண்டு வந்திருக்கிறீரே?''

''என்னடீ பணம் பணம்னு புலம்பறே? பராசக்தி குடுப்பாள்!''

''குடுப்பள்! இடுப்புத்துணிய பிச்சக்காரங்கிட்ட அவுத்துக் குடுத்துட்டு வாச ரேழில கோமணத்தோட நின்னுண்டு செல்லம்மான்னு கூப்பாடு போடுவீர்! நான் என் தலே விதிய எங்கே போய்ச் சொல்லியழ?''

நன்றி! ''பாஞ்சாலி சபதம் பாடிய பாரதி''

---

அன்பு வாசகர்களே!

உங்கள் ஆக்கபூர்வமான விமர்சனங்களை, கதை, கவிதை, கட்டுரை, துணுக்குகளை 'சுமைகள்' வரவேற்கிறது.

— சுமைகள் வெளியீட்டுக்குழு —



## சாம்பல் ஒரு சாம்பல்...

என்னிடம்
இன்னும் எஞ்சியிருப்பது
அவர்கள் அனுப்பிவைத்த
என்னை எரித்த
எனது சாம்பல்.
அவர்களின் ஆணைப்படி
எனது சாம்பல்
இப்போ என்னிடம்

இவர்கள் சந்தையில்
எனது உயிருக்கான விலை
ஒரு தீக்குச்சி.
ஒரேயொரு தீக்குச்சி.

எனது சாம்பலுக்கான விலையோ
3-30 + 0.50 குரோனர்கள்.
எனக்கு ஒரு வருத்தம்.
எனது இரவல் முகவரியைக்கூட
தப்பில்லாமல் இவர்களால்
எழுத முடியவில்லையே என்பதுதான்
"புத்தி ஜீவனுய்" எனது சாம்பலை
பதவியுயர்த்திய இவர்களுக்கு
எனது நன்றிகள்

— விமல்ராஜ் —

www.tamilarangam.net

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.